# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2015

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 9

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. தமிழர் பண்பாட்டுக்கழகம் என்ற அமைப்பைத் தோற்றுவித்தவர்

அ) மறைமலைஅடிகள் ஆ) ஞானப்பிரகாசஅடிகள்

இ) தனிநாயகம்அடிகள் ஈ) இளங்கோவடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. அல்பேட்சுவைட்சர் பிறந்த நாடு

அ) பிரித்தானியா ஆ) இத்தாலி இ) பிரான்சு ஈ) சேர்மனி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. இலங்கையில் போர்த்துக்கேயர் காலடிவைத்த நூற்றாண்டு

அ) 16 ஆ) 15 இ) 18 ஈ) 19

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. திரிதல் புணர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) தமிழ்மொழி ஆ) புற்றரை இ) வட்டமேசை ஈ) பலாப்பழம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. புதைபொருள் ஆய்வில் தமிழர் வாழ்ந்ததற்கான சான்றாகத் திருகோணமலையில் கண்டெடுக்கப்பட்டது

அ) ஓவியம் ஆ) சிற்பம் இ) கல்வெட்டு ஈ) எலும்புக்கூடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. **அன்பிலார் எல்லாம் தமக்குரியர்......** எனத் தொடங்கும் குறள் இடம்பெற்றுள்ள அதிகாரம்

அ) அடக்கமுடைமை ஆ) அன்புடைமை

இ) ஒழுக்கமுடைமை ஈ) ஊக்கமுடைமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. இலங்கையின் தொல்குடிகள்

அ) ஆரியர் ஆ) தமிழர் இ) சிங்களவர் ஈ) பறங்கியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. அல்லும்பகலும் என்ற இணைமொழித்தொடர் விளக்குவது

அ) நாள்முழுவதும் ஆ) பெருமுயற்சி

இ) நாலாபக்கமும் ஈ) நன்றும் தீதும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. நாகதீபம் பற்றிக் குறிப்பிடும் நூல்

அ) சிலப்பதிகாரம் ஆ) வளையாபதி இ) மணிமேகலை ஈ) குண்டலகேசி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. **புதியதொருவீடு** என்ற நாடகத்தை எழுதியவர்

அ) சின்னத்தம்பிப்புலவர் ஆ) பாவேந்தர்

இ) உருத்திரமூர்த்தி ஈ) கம்பர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. **துறைபோதல்** என்ற சொல்லின் பொருள்

அ) முற்றும் கொடுத்தல் ஆ) முற்றும் கற்றல்

இ) முற்றும் துறத்தல் ஈ) முற்றும் இழத்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. சொல்லின் இறுதியில் மட்டும் வரும் வினா எழுத்து

அ) ஏ ஆ) உ இ) ஆ ஈ) யா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. கோமரினது ஒடிசியைப் போன்று சிலப்பதிகாரத்தையும் உலகம் போற்றச் செய்யவேண்டும் என முனைந்தவர்

அ) தாவீதுஅடிகள் ஆ) தனிநாயகம்அடிகள்

இ) விபுலாநந்தஅடிகள் ஈ) விவேகானந்தஅடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. பின்வருவனவற்றுள் உவமைத் தொடர்

அ) ஒற்றைக்காலில் நிற்றல் ஆ) ஊமை கண்ட கனவு போல

இ) பொன்னம்பெரிய ஈ) மொழுமொழு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. **நாராய் நாராய் செங்கால் நாராய்.....** என்ற பாடலைச் செவியுற்ற மன்னன்

அ) பாண்டியமன்னன் ஆ) சேரமன்னன்

இ) சோழமன்னன் ஈ) பல்லவமன்னன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. திலகம் என்பது

அ) பொட்டு ஆ) நிலா இ) பூமி ஈ) பெண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. கோமர் என்ற புலவரின் நாடு

அ) சீனா ஆ) கிரேக்கம் இ) அயர்லாந்து ஈ) உரோமாபுரி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. இலங்கையில் மிகப்பெரிய தாழிக்காடு அமைந்துள்ள இடம்

அ) ஆனைக்கோட்டை ஆ) பொம்பரிப்பு

இ) கந்தரோடை ஈ) மாந்தை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. குறள் :- **இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்**

**________________ விழையும் சிறப்பு**

அ) ஒன்னார் ஆ) அன்னார் இ) இன்னார் ஈ) தென்னார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. தமிழரது வீரம் பற்றிப் புறநானூறு கூறுகிறது. இச்சொல்லியத்தில் இடம் பெற்றுள்ள செயப்படுபொருள்

அ) புறநானூறு ஆ) கூறுகிறது இ) தமிழர் ஈ) வீரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. **விடியவிடிய** என்பது

அ) அடுக்குத்தொடர் ஆ) இணைமொழி

இ) இரட்டைக்கிளவி ஈ) அடுக்கிடுக்குத்தொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. **"மகாவம்சம் வரலாற்று நூலல்ல"** எனக் கூறியவர்

அ) ஈ.டபிள்யூ. அதிகாரம் ஆ) லயனல் சரத்

இ) லயனல் ஜெயதிலக ஈ) சிறிலால் கொடிகார

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. கடல் + கோள் என்ற சொல்லைச் சேர்த்தால்

அ) கடல்கோள் ஆ) கடற்கோள் இ) கடக்கோள் ஈ) கடல்க்கோள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. **அழகன்** என்பது

அ) தெரிநிலைவினை ஆ) குறிப்புவினை

இ) வினையெச்சம் ஈ) குறைவினை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. தவறு செய்த மாணவன் ஆசிரியர் முன்பு ____________ நின்றான்.

அ) கூனிக்குறுகி ஆ) பாடிமகிழ்ந்து

இ) பேசிப்பழகி ஈ) ஒளிந்துமறைந்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. **பறந்தன** என்பது

அ) ஆண்பால் ஆ) பெண்பால் இ) பலர்பால் ஈ) பலவின்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. பின்வருவனவற்றுள் பகாச்சொல்

அ) அறிஞர் ஆ) உழவன் இ) நிலம் ஈ) பாவலர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. **மேழி பிடிக்குங்கை வேல்வேந்தர் நோக்குங்கை.....** எனத் தொடங்கும் பாடலில் சிறப்பிக்கப்படுபவர்

அ) உழவர் ஆ) வேந்தர் இ) அரசர் ஈ) அறிஞர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. **கிடுகிடு** என்பது

அ) இணைமொழி ஆ) அடுக்கிடுக்குத்தொடர்

இ) அடுக்குத்தொடர் ஈ) இரட்டைக்கிளவி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. தனிநாயம் அடிகளார் இறுதியாக வெளியிட்ட நூல்

அ) தமிழ்மறைவிருந்து ஆ) தமிழ்ப்பண்பாடு

இ) யாழ்நூல் ஈ) தமிழியல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

**புள்ளிகள் 30**

## 2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

பண்டைக்காலம் முதல் பயிர்த்தொழிலே சிறந்த தொழிலாகக் கருதப்பட்டு வருகின்றது. முற்காலத்தில் தமிழர் உழுதுண்டு வாழவே விரும்பினர். சீரைத் தேடின் ஏரைத் தேடு என்றார் ஒரு புலவர். ஏர்த்தொழில் இனிது நடை பெறுவதற்கு மழை இன்றியமையாதது. ஆகவே உழவர் வானத்திலே தவழும் கார் முகிலையே நோக்கி வாழ்ந்தார்கள். ஓங்கி உயர்ந்த மலைகளில் மழை முகில் தவழக் கண்டால் உழவர் உள்ளம் மகிழும். கார்முகிலின் இடையே மின்னல் வீசக் கண்டால் அவர்களது உள்ளம் துள்ளிக் குதிக்கும். ஆற்று நீராலும் மழை நீராலும் உணவுப் பொருட்களை விளைவிக்கின்ற உழவரை நாடு பாராட்டி மகிழ்ந்தது. ஏரடிக்கும் சிறு கோலால் தரணியாள சீராடும் முடியரசர் இருந்து செங்கோல் செலுத்துவர் என்று சேக்கிழார் உழவர் பற்றிப் பெருமையாகக் கூறுகிறார். உழவுத்தொழிலைப் போற்றுவோம். உழவர்களைப் போற்றுவோம்.

1. மழைமுகில் தவழக் கண்டால் யாருடைய உள்ளம் மகிழும்?

   ________________________________________

2. ஏரடிக்கும் சிறு கோலால் தரணியாள சீராடும் முடியரசர் இருந்து செங்கோல் செலுத்துவர் என்று கூறியவர் யார்?

   ________________________________________

3. பண்டைக்காலம் முதல் எத்தொழில் சிறந்த தொழிலாகக் கருதப்படுகிறது?

   ________________________________________

   ________________________________________

4. சீரைத் தேடின் எதைத் தேடவேண்டும் எனக் கூறப்படுகிறது?

   ________________________________________

   ________________________________________

5. ஏர்த்தொழில் இனிது நடைபெறுவதற்கு இன்றியமையாதது எது?

   ________________________________________

   ________________________________________

| புள்ளிகள் 10 |
|---|

3) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று

இக்குறளின் பொருளைத் தருக?

2. வெட்கப்படுகிறேனடா நான் என்று சங்கிலியன் யாருக்கு ஏன் கூறினான்?

3. சத்திமுற்றப்புலவர் ஏன் பாண்டிய மன்னனைக் காண வந்தார்?

4. தனிநாயகம் அடிகளார் செய்த தமிழ்த் தொண்டுகள் இரண்டை எழுதுக?

5. "காயும் பகைவரைக் காய்ந்து பொருதுநாம்
காயம் விடுவதே மேலாகும்"
என்ற பல்சுவைப் பாடலடிகளில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

6. எந்தப் பௌத்தத்தை அடிப்படையாகக் கொண்டு மகாவம்சம் எழுதப்பட்டது?

7. போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றுவதற்கான முதன்மை நோக்கங்கள் யாவை?

புள்ளிகள் 10

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை ஆக்குவோம்.**

## வெற்றி உனக்கே

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்றாய் | தோற்றாய் | கிடப்பது | சிந்தி | போராடு |

தோல்வியைக் கண்டு நீ துவளாமல்
தொடர்ந்து ____________________ நீ வென்றிடுவாய்
செயலில் கண்ணாய் நீ இருப்பாய்
சேர்ந்தே ____________________ச் செயற்படுவாய்
வெற்றிகள் உடனே கிடைக்காது
வியர்வை ____________________ நீ உழைக்காமல்
தோல்வி அடைவது தவறல்ல
சோர்ந்தே ____________________ தான் தவறு
எதனால் ____________________ எண்ணிப் பார்
என்றும் வெற்றி உனதாகும்

| புள்ளிகள் 10 |
|---|
| |

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. அ. மாறுபடு புணர்ச்சி எத்தனை வகைப்படும்?

______________________________

ஆ. தோன்றல், கெடுதல் புணர்ச்சிகளுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

தோன்றல் :- ______________________________

கெடுதல் :- ______________________________

2. தரப்பட்டுள்ள சொற்களைப் பகுதி, இடைநிலை, விகுதி எனப் பகுத்து எழுதுக.

| | பகுதி | இடைநிலை | விகுதி |
|---|---|---|---|
| நிற்கின்றது | | | |
| ஆடினான் | | | |
| எழுதுவாள் | | | |

3. அ. மெய்யெழுத்துகள் எத்தனை?

______________________________

ஆ. இடையின மெய்யெழுத்துகளைத் தருக.

______________________________

4. தரப்பட்டுள்ள மரபுத்தொடர்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

கங்குகரை :- ______________________________

செக்கச்சிவந்த :- ______________________________

சிரித்துச் சிரித்து :- ______________________________

5. அ. இலக்கிய வகையால் தமிழ் மொழியில் உள்ள சொற்கள் எத்தனை வகைப்படும்?

______________________________

ஆ. இயற்சொல், திரிசொல் இவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

இயற்சொல் :- ______________________________

திரிசொல் :- ______________________________

புள்ளிகள் 15

6. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

Education is very impotant to everyone.In the olden days not everyone had the opportunity to have an education. But nowadays we have the great opportunity to get good education. So we must must make the best use of this opportunity and learn well. By continuing our education we will become knowledgeable people.

Uddannelse er en vigtig ting for alle. I gamle dage var det ikke alle, der havde mulighed for at uddanne sig. Men nu har vi flere muligheder for at uddanne os. Derfor skal vi udnytte disse muligheder og uddanne os. Når vi tillære flere ting, bliver vi også meget uddannede personer.

L'istruzione è molto importante per tutti noi. In passato non tutti hanno avuto l'opportunità di ricevere un'istruzione. Ma al giorno d'oggi noi abbiamo la grande opportunità di ricevere una buona istruzione. Quindi dobbiamo sfruttare questa opportunità ed imparare al meglio. Proseguendo con la nostra istruzione possiamo diventare delle persone competenti.

Studie is erg belangrijk voor iedereen. In het verleden had niet iedereen de kans om te studeren, maar nu hebben wij geweldige kansen om goed te studeren. Dus moeten wij deze kans erg goed gebruiken en goed leren. Door het doorstuderen zullen wij mensen zijn met veel kennis.

Utbildning är väldigt viktigt för alla. Förr i tiden hade alla inte möjligheten till en utbildning. Men nuförtiden har vi goda möjligheter att skaffa bra utbildning. Därför måste vi ta vara på denna möjlighet och lära oss väl. Genom att fortsätta att utbilda sig kommer vi bli väldigt kunskapsbesatta.

Utdanning er veldig viktig for alle. I gamle dager hadde ikke alle anledning til å ta utdanning. Men i våre dager har vi store muligheter til å få en god utdanning. Derfor må vi gjøre det beste ut av denne muligheten og utnytte den godt. Ved å fortsette med vår utdanning vil vi bli et kunnskapsrikt folk.

Die Bildung ist für alle sehr wichtig. In alten Zeiten hatten nicht alle die Möglichkeit auf eine gute Bildung. Aber zur heutigen Zeit haben wir alle große Möglichkeiten, um eine gute Bildung zu erhalten. Deshalb müssen wir alle Möglichkeit nutzen und gut lernen. Wenn wir weiterhin lernen, werden wir intelligente Menschen.

Les études sont très importantes pour tout le monde. Auparavant, tout le monde n'avait pas eu l'occasion de faire leurs études. Par contre, de nos jours, nous avons une bonne opportunité pour poursuivre nos études et saisir cette opportunité pour bien apprendre. En continuant à bien travailler, on sera très intelligent.

புள்ளிகள் 05

7) **கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- சங்கிலிமன்னன் வரலாறு பற்றி நீர் அறிந்து கொண்டவை
- புலவரும் வறுமையும்
- உம்மால் மறக்க முடியாத ஒரு நிகழ்வு

புள்ளிகள் 20